# 13 & 14 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### 14 ஆகஸ்ட் 2023 பிரிவினை கொடுமைகள் நினைவு தினம்

- 1947ஆம் ஆண்டு பிரிவினையின் போது ஏற்பட்ட போராட்டங்கள் மற்றும் தியாகங்களின் நினைவாக இந்தியா இன்று பிரிவினை கொடுமை நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 14 ஆம் தேதியை 'விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ்' அல்லது பிரிவினையின் கொடுமை நினைவு தினமாக அறிவித்தார்.
- பிரிவினையின் போது உயிர் இழந்தவர்கள். பிரிவினையால் ஏற்பட்ட மனமற்ற வெறுப்பு மற்றும் வன்முறையால் லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர், பலர் உயிரிழந்துள்ளனர் என்று கூறியிருந்தார்.
- சமூகப் பிளவுகள், நல்லிணக்கமின்மை ஆகிய விஷத்தை அகற்றி, ஒற்றுமை, சமூக நல்லிணக்கம் மற்றும் மனித அதிகாரம் ஆகியவற்றின் உணர்வை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் நமக்கு நினைவூட்டுவதாக பிரதமர் கூறினார்.

## செய்திகளில் இடம் பெற்ற மனிதர்கள்

### அமித் ஜிங்ரான்



- இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) எஸ்பிஐ லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (SBI Life) இன் நிர்வாக இயக்குநர் (MD) மற்றும் தலைமை செயல் அதிகாரி (CEO) ஆக "அமித் ஜிங்ரானை" நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- எஸ்பிஐ லைஃபின் தற்போதைய நிர்வாக இயக்குநர் (MD) மற்றும் தலைமை செயல் அதிகாரியான (CEO) மகேஷ் குமார் ஷர்மாவிற்குப் பின் அமித் ஜிங்ரான் பதவியேற்க உள்ளார்.
- அமித் ஜிங்ரான் தற்போது தெலுங்கானாவின் ஹைதராபாத் வட்டத்தில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் (SBI) தலைமை பொது மேலாளராக (CGM) பணியாற்றி வருகிறார்.
- அமித் ஜிங்ரான் 1991 இல் உத்திரபிரதேசம் (உ.பி.) லக்னோ வட்டத்தில் எஸ்.பி.ஐ.யில் ஒரு பயிற்சி அதிகாரியாக சேர்ந்தார்.
- அவர் எஸ்பிஐ, சிகாகோ (இல்லினாய்ஸ்), யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா (அமெரிக்கா) வின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் (CEO) பணியாற்றியுள்ளார்.

SHANMUGAM IAS ACADEMY

**இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்** (IRDAI)

- தலைவர்– தேபாசிஷ் பாண்டா
- தலைமையகம் – ஹைதராபாத், தெலுங்கானா
- நிறுவப்பட்ட ஆண்டு – 1999

## சென்னை ஐகோர்ட்டுக்கு 3 புதிய நீதிபதிகளை நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு பரிந்துரை



- சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் "குஜராத், அலகாபாத், தெலுங்கானா மாநில ஐகோர்ட்டுகளில் நீதிபதியாக பணியாற்றி வரும் 3 நீதிபதிகளை சென்னை ஐகோர்ட்டுக்கு மாற்ற முடிவு செய்தது.
- இதுதொடர்பான பரிந்துரையை மத்திய அரசு, சுப்ரீம் கோர்ட்டு கொலீஜியம் அனுப்பி வைத்துள்ளது.
- குஜராத் ஐகோர்ட்டில் 10–வது மூத்த நீதிபதியாக இருப்பவர் "கீதா கோபி". பல்வேறு மாவட்ட கோர்ட்டுகளில் பணியாற்றிய இவர், 2020–ம் ஆண்டு குஜராத் ஐகோர்ட்டு நீதிபதியாக பதவி ஏற்றார்.
- அலகாபாத் ஐகோர்ட்டு நீதிபதி "விவேக் குமார் சிங்", 2017–ம் ஆண்டு கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2019–ம் ஆண்டு நிரந்தர நீதிபதியானார். அலகாபாத் ஐகோர்ட்டில் தற்போது 19–வது மூத்த நீதிபதியாக உள்ளார்.
- தெலுங்கானா ஐகோர்ட்டில் 14–வது மூத்த நீதிபதியாக இருப்பவர் "சுதீர்குமார்". 1969–ம் ஆண்டு டிசம்பர் 21–ந்தேதி பிறந்த இவர்,சட்டப்படிப்பை முடித்து, 1994–ம் ஆண்டு வக்கீல் தொழிலை தொடங்கினார். 2022–ம் ஆண்டு மார்ச் 24–ந்தேதி ஐகோர்ட்டு நீதிபதியாக பதவி ஏற்றார்.
- சுப்ரீம் கோர்ட்டு பரிந்துரையின்படி, இந்த 3 நீதிபதிகளும் சென்னை ஐகோர்ட்டுக்கு நியமிக்கும் பட்சத்தில், "நீதிபதி கீதா கோபி 2028–ம் ஆண்டும், நீதிபதி விவேக்குமார் சிங் 2030–ம் ஆண்டும், நீதிபதி சுதீர்குமார் 2031–ம் ஆண்டும் ஓய்வு பெறுவார்கள்" என்பது குறிப்பிடத்தக்கது.

# செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

## ரயில் அருங்காட்சியகத்தில் "சுதந்திர தின கண்காட்சி"



- சென்னை ரயில் அருங்காட்சியகத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு, திங்கள்கிழமை(ஆக.14) கண்காட்சி நடத்தப்படுகிறது.
- சென்னை ஐசிஎ∴ப்–இல் உள்ள ரயில் அருங்காட்சியகத்தில் 1947–இல் இந்தியா – பாகிஸ்தான் பிரிந்த போது மக்கள் அனுபவித்த துயரங்கள் குறித்த கண்காட்சி ஐசிஎ∴ப் மூலம் நடத்தப்படுகிறது.

SHANMUGAM IAS ACADEMY

❖ அங்குள்ள நாட்டிய அரங்கத்தில் காலை 10 முதல் மாலை 6 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

### "மத்திய உள்துறை அமைச்சர் பதக்கம்: 140 போலீஸ் அதிகாரிகள் தேர்வு"




❖ "வழக்கு விசாரணையை சிறந்த முறையில் மேற்கொண்டதற்கான" இந்த ஆண்டுக்கான மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கத்துக்கு தமிழகத்தைச் சேர்ந்த 8 காவல் அதிகாரிகள் உள்பட நாடு முழுவதிலுமிருந்து 140 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 22 பெண் காவல் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

❖ வழக்கு விசாரணையில் தலை சிறந்து விளங்கும் அதிகாரிகளை அங்கீகரித்து, நாட்டில் விசாரணைகள் தரமான முறையில் நடைபெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த 2018–ஆம் ஆண்டு இந்தப் பதக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பதக்கத்துக்கு தேர்வானவர்கள் குறித்த அறிவிப்பு ஆகஸ்ட் 12–ஆம் தேதி வெளியிடப்படும்.

❖ நிகழாண்டில் 140 காவல் அதிகாரிகள் இந்த பதக்கத்துக்கு தேர்வாகியுள்ளனர். இதில் மத்திய புலனாய்வு அமைப்பிலிருந்து (சிபிஐ) 15 பேரும், தேசிய புலனாய்வு முகமையிலிருந்து (என்ஐஏ) 12 பேரும் தேர்வாகியுள்ளனர்.

## விளையாட்டு

### "இந்தியா 4–ஆவது முறையாக சாம்பியன்"



❖ சென்னையில் நடைபெற்ற 7–ஆவது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா 4–3 கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி, சாம்பியன் கோப்பையை வென்றது.

❖ இப்போட்டியில் இந்தியா சாம்பியனாவது இது 4–ஆவது முறையாகும்.

❖ இதற்கு முன் 2011, 2016, 2018 ஆகிய ஆண்டுகளில் கோப்பை வென்ற இந்தியா, தற்போது போட்டியில் அதிகமுறை சாம்பியன் ஆன அணியாக உருவெடுத்துள்ளது.

❖ மறுபுறம், அதிகபட்சமாக போட்டியில் தொடர்ந்து 5 முறை 3–ஆம் இடம் பிடித்த மலேசியா, இம்முறை ஒரு படி முன்னேறி 2– ஆவது இடத்தைப் பிடித்தது.

❖ ஜப்பான், தென் கொரியா, பாகிஸ்தான், சீனா அணிகள் முறையே அடுத்தடுத்த 4 இடங்களைப் பிடித்தன.

SHANMUGAM IAS ACADEMY

## திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

### "7 மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்"



- **தில்லி நிர்வாக திருத்த மசோதா** உள்பட 7 மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து அந்த மசோதாக்கள் சட்டமாகியுள்ளன.
- கடந்த மே மாதம் "தில்லி யூனியன் பிரதேசத்தில் குரூப்–ஏ அதிகாரிகள் நியமனம் மற்றும் பணியிட மாற்றத்துக்கு ஆணையம்" அமைக்க மத்திய அரசு அவசரச்சட்டம் கொண்டு வந்தது.
- இதன்மூலம் தில்லி அரசு அதிகாரிகளின் நியமனம் மற்றும் பணியிடமாற்றம் குறித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம், அந்த யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநருக்கே மீண்டும் வழங்கப்பட்டது.
- **"எண்ம தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா"**– இந்த மசோதாவில் தனிநபர் தரவுகளை நிறுவனங்கள் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பிரிவுகள் உள்ளன. அத்துடன் அந்த நிறுவனங்கள் தரவுகளை தவறாகப் பயன்படுத்தினால் அல்லது தரவுகளைப் பாதுகாக்கத் தவறினால் ரூ.250 கோடி வரை அபராதம் விதிக்கப்படும்.
- "**பிறப்பு & இறப்பு சட்டத்திருத்த மசோதா**"– கல்வி நிறுவனங்களில் சேர்க்கை, ஓட்டுநர் உரிமம் வழங்கல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், ஆதார் எண், திருமணப் பதிவு, அரசுப் பணி நியமனம் உள்ளிட்டவற்றுக்கு 'பிறப்புச் சான்றிதழை' மட்டுமே ஆவணமாகப் பயன்படுத்திக்கொள்ள பிறப்பு மற்றும் இறப்பு சட்டத்திருத்த மசோதா அனுமதிக்கிறது.
- இதேபோல "**நன்னம்பிக்கை(ஜன் விஸ்வாஸ்) சட்டப் பிரிவுகள் திருத்த மசோதா, இந்திய கல்வி மேலாண்மை நிறுவனங்கள் திருத்த மசோதா, தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா, கடலோரப் பகுதிகள் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்காற்று) திருத்த மசோதா**" ஆகியவற்றுக்கும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து அந்த மசோதாக்கள் சட்டமாகியுள்ளன.

## வங்கி & நிதி

### இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) 3வது – இருமாத நாணயக் கொள்கையின் சிறப்பம்சங்கள்




- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) "நாணயக் கொள்கைக் குழு" (MPC) இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) வைத்திருக்கும் 'பணவியல் கொள்கை அறிக்கையை, வெளியிட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- ஏப்ரல்–ஜூன், 2024–25– க்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 6.6% என்று கணிக்கப்பட்டுள்ளது.

**இந்திய ரிசர்வ் வங்கி** (RBI)

- ஆளுநர் – சக்திகாந்த தாஸ்
- துணை ஆளுநர்கள் – மைக்கேல் தேபப்ரதா பத்ரா, எம். ராஜேஷ்வர் ராவ், டி. ரபி சங்கர், மற்றும் சுவாமிநாதன் ஜானகிராமன்
- நிறுவப்பட்ட ஆண்டு – 1 ஏப்ரல் 1935
- தலைமையகம் – மும்பை, மகாராஷ்டிரா

| Category | Rate |
|---|---|
| Policy Repo Rate | 6.50% |
| Fixed Reverse Repo Rate | 3.35% |
| Standing Deposit Facility (SDF) Rate | 6.25% |
| Marginal Standing Facility (MSF) Rate | 6.75% |
| Bank Rate | 6.75% |
| Cash Reserve Ratio (CRR) | 4.50% |
| Statutory Liquidity Ratio (SLR) | 18% |

SHANMUGA